# விஜய் கிண்டலடித்த ‘மிசா ஹிஸ்டரி’ இதுதான்.. 1978ல் சட்டசபையில் கலைஞர் பேசியது!




தமிழக சட்டசபையில் காவல்துறை மானிய கோரிக்கை மீதான விவாதங்களுக்கு இன்று செப்டம்பர் 7ந் தேதி முதல்வர் விஜய் பதிலளித்தார். அப்போது, “நம்ம நண்பர்கள் எது பேசினாலும், மிசா பார்த்தவங்க, மிசா பார்த்தவங்க, எல்லாத்துக்கும் மிசாவை கொண்டு வந்து விட் டாங்கன்னா என்ன செய்வதுன்னு தெரியல. ஐயா பெரியோர் களே, எல்லாருக்கும் அந்த மிசாவை பத்தின ஹிஸ்டரியை (MISA HISTORY) பற்றி நல்லா தெரியும்” என்று முதல்வர் விஜய் பேசினார்.

### மிசாவும் நெருக்கடி நிலையும்

MISA - Maintenance of Internal Security Act என்பது இந்தியாவில் 1971ல் கொண்டுவரப்பட்ட உள்நாட்டு பாதுகாப் புச் சட்டம். நாட்டின் பாதுகாப்பு, பொது ஒழுங்கு உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையில் ஒருவரை வழக்கமான நீதி மன்ற விசாரணைக்கு முன்பாகவே தடுப்புக் காவலில் வைக்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு விரிவான அதி காரங்களை இந்தச் சட்டம் வழங்கியது.

1975 ஜூன் 25ஆம் தேதி, பிரதமராக இருந்த இந்திரா காந்தி பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் ஃபக்ருதீன் அலி அகமது அரசமைப்புச் சட்டத்தின் 352வது பிரிவின் கீழ் இந்தியாவில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார். நெருக்கடி நிலைக் காலத்தில் ஏற்கெனவே அமலில் இருந்த மிசா சட்டம் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பத்திரிகையா ளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் தடுப்புக் காவலில் வைக் கப்பட்டனர்.

தமிழகத்தில் நெருக்கடி நிலையை எதிர்த்து வந்த தி.மு.க. அரசு 1976 ஜனவரி 31ஆம் தேதி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தி.மு.க.வினர் மட்டுமின்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்தாபன காங் கிரஸ், திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மிசாவின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

### அவசர நிலை மிசா ரத்து

1977 மார்ச் 21ஆம் தேதி நெருக்கடி நிலை முடிவுக்கு வந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த மொரார்ஜி தேசாய் தலை மையிலான ஜனதா அரசு மிசாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தது. Maintenance of Internal Security (Repeal) Act, 1978 மூலம் மிசா சட்டம் 1978 ஆகஸ்ட் 3 அன்று ரத்து செய்யப்பட்டது.

### நீதிபதி இஸ்மாயில் கமிஷன்

தமிழகத்தில் சென்னை மத்திய சிறையில் மிசா அரசியல் கைதிகள் தாக்கப்பட்டதாகவும் கொடுமைப்படுத்தப்பட்டதாக வும் எழுந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க 1977 மே 12ஆம் தேதி ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி தலைமையிலான ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நீதிபதி எம்.எம். இஸ்மாயில் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.

இஸ்மாயில் கமிஷன் விசாரணை நடத்தி, சென்னை மத் திய சிறையில் மிசா கைதிகள் தாக்கப்பட்டு கொடுமைப்படுத் தப்பட்ட குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் உண்மை எனக் கண்டறிந்து, சில சிறை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது. அந்தக் கமிஷன் தனது அறிக்கையை 1977 செப்டம்பர் 26 ஆம் தேதி எம்.ஜி.ஆர். தலைமையிலான முதலாவது அ.தி.மு.க. அரசிடம் சமர்ப்பித்தது.

### சட்டசபையில் கலைஞர் பேசியது!

இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழக சட்டசபையில் விவாதம் நடை பெற்றது. இந்த விவாதத்தில் 1978ம் ஆண்டு ஏப்ரல் 7ந் தேதி தமிழக சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் பேசியதாவது:

சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடந்து விட்ட, ஆனால் இனி என்றென்றும் நடக்கக் கூடாது என்று நாம் எண்ணுகின்ற கோர நிகழ்ச்சிகளைப் பற்றி நடைபெற்ற விசாரணையில் அறிக்கை மீது இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் விவாதத்தை நடத்தி, இந்த அறிக்கை மீது உடனடி நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முனைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற முற் படுகின்றேன்.

20 மாத காலமாக இந்தியாவை இருள் கவ்விக் கொண்டு இருக்கிறது என்று விமர்சிக்கப்பட்ட அந்த நேரத்தில் சென்னை மாநகரத்தின் சிறைச்சாலை பயங்கர குகையாக உருவெ டுத்து, மனிதர்கள் வேங்கைகளாகவும், புலிகளாகவும், சிறுத் தைகளாகவும், நரிகளாகவும் மாறி மிசாக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்ட பல்வேறு கட்சித் தோழர்கள் கொடு மைப்படுத்தியது குறித்து இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய அறிக்கையினைத் தந்து இருக்கின்றது.

அறிக்கை தரப்பட்டு 5 திங்கள்களுக்கு மேலாகியும் இன் னும் நடவடிக்கை அந்த அறிக்கை மீது எடுத்துக் கொள்ளப் படவில்லை என்பது மக்களின் ஒரு பெரும் மனக்குறை என் பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

### நெருக்கடி நிலையும் அதிகாரிகளின் பொறுப்பும்

ஏற்பட்டு விட்ட அந்தக் கொடுமைகளுக்கு யார் காரணம், எவர் காரணம் என்கின்ற ஆராய்ச்சியில் இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் இந்த அறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களை உறுப்பினர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இவ்வளவு கொடுமைகளுக்கும் அதிகாரிகளைத் தூண்டிவிடக் காரணமாக இருந்தது நெருக் கடிக்கால பிரகடனம் என்பதை யாரும் மறுத்திட இயலாது.

ஒரு குழந்தையைத் தூக்கிப் போட்ட குற்றம் முன்பு இருந்த மத்திய அரசைச் சாரும் என்றால் இந்தக் குழந்தையின் தலையில் ஒரு பெரும் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்ட குற்றம் அதைக் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்த அதிகாரிகளைச் சாரும் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஒன்றை நான் நினைவுபடுத்த வேண்டுமானால், உச்ச நீதிமன்றத்தில் அன்றைய அட்டர்னி ஜெனர லாக இருந்தவர் மிகக் கம்பீரமாக எழுந்து நின்று ஒரு பயங்கரமான கருத்தைத் தெரிவித்தார். சிறைச்சாலையில் வைக்கப்படும் மிசாக் கைதிகள் எக்கதிக்கு ஆளாக்கப்பட்டாலும், சுட்டுக் கொல்லப்பட் டாலும், கவர்னரையே சிறையில் அடைத்தாலும், என்ன நடந்தாலும், நீதிமன்றம் ஏன் என்று கேட்கக் கூடாது என்று அரசின் சார்பில் அட்டர்னி ஜெனரல் வாதாடிய நேரம் அந்த நேரம்.

### தி.மு.க. அரசு கலைப்பு - மிசா கைதுகள்

அப்படிப்பட்ட நேரத்தில் இனி ஒருமுறை சுதந்திர ஒளியை இந்திய நாட்டு மக்கள் காண்பார்கள் என்ற எண்ணமே இல் லாத சூழலில், சுதந்திர மூச்சினை இந்திய நாட்டு மக்கள் சுவா சிக்க இயலும் என்று நம்ப முடியாத ஒரு நிலை. அந்த நேரத் தில்தான் 1976ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ஆம் நாள் நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்ற காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வெறுப்பு கொண்டு, மத்திய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தது.

அப்படிக் கலைக்கப்பட்ட பிறகு 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத்தினர், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், பழைய காங்கிரஸைச் சேர்ந்த தோழர் கள், திராவிடர் கழக நண்பர்கள், நெருக்கடி நிலையை





எதிர்த்த கட்சிகள் எவை எவையோ அந்தக் கட்சிகளைச் சேர்ந் தவர்கள் மிசா கைதிகளாக தமிழகத்திலே பல்லாயிரக்கணக் கானோர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள்.

அவர்கள் அங்கே கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்ப தையும் அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்பதையும், கவர் னர் பெருமதிப்பிற்குரிய மேதகு பட்வாரி அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்பதற்குமுன்பு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியில் இலாகாப் பூர்வமான விசா ரணை நடைபெற்று எந்தவிதமான தவறும் எத்தகைய கொடு மையும் சிறைச்சாலை யிலே நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்க, நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதே மேல் என்று சொல்லி, 1977 மே திங்கள் 12ஆம் நாள் தமிழக அரசு சிறப்பு வெளியீட்டில் கவர்னர் பட்வாரி அவர்கள் ஆட்சி யில் போடப்பட்ட ஆணை பின்வருமாறு:

“சென்னை மத்திய சிறையிலே காவல், பாதுகாப்பு அரசி யல் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டதாகவும், அடிக்கப்பட் டதாகவும் 1976 பிப்ரவரியில் குற்றச்சாட்டுக்கள் செய்யப்பட் டது. அந்த நிலையில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் இலாகா அளவில் விசாரணை நடத்திட அரசு ஆணையிட்டது. அந்த விசாரணையின் போது குற்றச்சாட்டுக் கள் மெய்ப்பிக்கப்பட வில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் இந் தக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய வேண்டும் என்ற முறையீடு எழுந்தது. அதற்கிணங்க இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய நீதிபதி இஸ்மாயில் அவர்களைக் கொண்டு தனிநபர் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுகிறது” என்ற அறிவிப்பு வெளியாயிற்று.

### இஸ்மாயில் கமிஷன் கண்டறிந்த உண்மை

எனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சென்னை சிறைச்சாலையிலே அரசியல் கைதிகள் தாக்கப்பட்டது, கொடு மைப்படுத்தப்பட்டது உண்மை என்று திட்டவட்டமாக,



தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகள் பொறுப்பாளிகள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவர் கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திட்ட வட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இத்தனையும் அறிவித்து-நண்பர் லத்தீப் அவர் கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இலாகா விசாரணையில் எதுவுமே நடக்கவில்லை என்று அறிவித்திருக்கிறார்களே, அதுவே மாபெரும் குற்றமாகும்.

எனவே, அரசியல் கைதிகளை அடித்தவர்கள், நொறுக்கி யவர்கள், கொடுமைப்படுத்தியவர்கள் - அவர்கள் யார்? அவர் கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்பதற்கு முன்பு அப்படி நடக்கவே இல்லை என்று விசாரணை நடத்தி அறி வித்தார்களே, அவர்கள் யார், எவர் என்று தெரிந்து அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மென்று இந்த அரசை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### 1976 ஜனவரி 31 - ஆட்சி கலைப்பு

சென்னை சிறைச்சாலையில் சம்பவங்கள் எப்படி நடைபெற்றன என்ற சுருக்கத்தை அறிக்கையிலே நாம் காணுகிறோம் என்றாலும், நான் அது குறித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1976 ஜனவரி 31ஆம் தேதி மாலை 6.30 மணி யளவில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய் தியை நாங்கள் அன்றைக்கு செய்தி நிறுவனங்கள் மூலமாக அறிகிறோம்; வானொலி மூலமாக அறிகி றோம். அந்தச் செய்தி எங்கள் காதிலே விழுகிற அதே நேரத்தில் எல்லா அமைச்சர்கள் வீட்டு டெலிபோன் களும் துண்டிக்கப்படுகின்றன.



நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல மாநி லம் முழுவதும் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கைது செய் யப்படுகிறார்கள். அப்படி கைது செய்யப்பட்ட யாரையும் இன் டர்வியூ காண—நேர்காணல் என்ற ஒரு முறை இருக்கிற து—அதைப் பயன்படுத்திக் கொள்ள எந்த உறுப்பினருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை.

என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள்? உட னடியாக உறவினர்களுக்கு இன்டர்வியூ காண சந்தர்ப்பம் அளிப்பதுதானே சிறைச்சாலையிலே உள்ள முறை. ஏன் அளிக்கப்படவில்லை என்று ஒரு நாள் பொறுத்துப் பார்த் தோம். ஒரு வாரம் பொறுத்துப் பார்த்தோம்.

இதற்கிடையில் எங்களுக்கு செய்தி எட்டுவதற்கு முன்பாக பல மைல் தொலைவிலுள்ள உற்றார் உறவினர்களுக்கெல் லாம் சென்னை சிறையிலே அரசியல் கைதிகள், மிசா கைதி கள் மிக பலமாக அடித்து நொறுக்கப்படுகிறார்கள் என்ற செய்தி தமிழ்நாடு முழுவதும் பரப்பப்படுகிறது.

ஏன் தமிழகத்தின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் இந்தக் கொடுமை நடைபெறவில்லையா? சென் னைச் சிறைச்சாலையிலே நடந்தது மட்டும் அப்படிப் பரப்பப்படுகிறது. அரசியல் கட்சிக்காரர்களை அச்சுறுத் துகின்ற நோக்கத்திலே தமிழ்நாட்டிலே ஒரு பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளே யார் யார் அடிபடுகிறார்கள் என்ற செய்தி பரப்பப்படுகிறது.

அவர்களுடைய உற்றார், உறவினர் எல்லாம் வெளியே இருக்கிறோம். எங்களுக்குத் தகவல் எட்டு வதற்கு முன்பாக பல கல் தொலைவில் இருக்கின்ற மக்களுக்கு இந்தச் செய்தி பரப்பப்படுகிறது.

சென்னை சிறைச்சாலையிலே திராவிட முன் னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பழைய காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியவற்றின் உறுப் பினர் பலர் கைதிகளாக அடைக்கப்பட்டார்கள். அவர்கள் கடு மையாக அடிக்கப்படுகிறார்கள். அவர்களிலே பலபேர் உயி ருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அளவுக்குச் செய்திகள் வருகின்றன. இங்கே சிறைச்சாலை வாசலிலே உற்றார் உறவினர் காத்திருக்கிறார்கள். அவர்களிலே யாருக் கும் நேர்காணலுக்கு (இன்டர்வியூ) அனுமதி தரப்பட வில்லை.

### இந்திரா காந்தி, குடியரசுத் தலைவர், ஆளுநருக்கு தந்தி

இதற்குப் பிறகு நாங்கள் பிப்ரவரி 26ஆம் நாள் வரையில் பொறுத்துப் பார்த்தோம். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர வர்களுக்கும், இந்தியப் பிரதமருக்கும்-

தலைவரவர்களே, பிப்ரவரி திங்கள் 26ஆம் நாளன்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும், இந்தி யக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், ஆளுநருக்கும் ஒரு தந்தி கொடுத்தேன். அந்தத் தந்தியில்,

“Interview for relatives of MISA detenus of DMK party in Tamil Nadu not yet granted for the past 26 days in Madras prison: Reason we reliably understand the detenus are mer cilessly beaten inside the prison. M.Ps., former MLAs and officebearers of DMK party are amongst such detenus so beaten. Request your immediate intervention preventing illtreatment and necessary action to get interview”,

என்று ஒரு தந்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அளித்து அந்தத் தந்தியின் நகல்களை இரா. செழியன் எம்.பிக்கும், கவர்னரின் ஆலோ சகருக்கும், தமிழ்நாடு அரசு சீஃப் செக்ரட்டரிக்கும், எம்.ஜி. கோரே எம்.பிக்கும் (சோசலிஸ்ட் பார்ட்டி, பாம்பே), டி.கே. சீனுவாசனுக்கும், ஹோம் மினிஸ்டர் பிரமானந்த ரெட்டிக் கும், ஸ்டேட் மினிஸ்டர் ஃபார் ஹோம் டிபார்ட்மெண்ட் ஓம் மேத்தாவுக்கும் அனுப்பிவைத்தேன். இத்த னைப் பேர்களுக்கும் அந்தப் பிரதிகளை அனுப்பி வைத்தேன்.

### குடியரசுத் தலைவருக்கு எழுதிய முழுக் கடிதம்

26ஆம் தேதி தந்தி கொடுத்தது மாத்திரமல்ல. 27 ஆம் தேதியன்று குடியரசுத் தலைவருக்கு மிசா கைதி கள் இந்த நிலையிலே சிறைச்சாலையிலே நடத்தப் படுகிறார்கள் என்பது குறித்து ஒரு கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில்,

“Your Excellency.

After the DMK Ministry has been dissolved followed by the imposition of President Rule in Tamil Nadu, the convict warders and warders of other category in the Madras Central Jail have been used for brutal attacks over the arrested persons for 2 or 3 days from January 31st onwards. They have terribly beaten and tortured the MISA detenus, including DMK prisoners.

Notwithstanding the pain and torture, it is said that some people have signed on compulsion. They were not even provided with proper food and water till one week after they were locked up inside 11 gallows.

Among those who have been treated so very badly, some are Deputy Secretaries of the DMK Head Office, some are Members of Parliament, some are Members of the Legislative Assembly. They have been scolded in abusive and filthy language. They have been treated bitterly. They have been locked inside the cells even at day time till 10 days. I do hope that the Government would not have ordered to treat them like this.

Those people who have been brutally beaten have been terrorised that if they reveal the fact outside, they will be beaten once again inside the Jail. If your Excellency want to know the facts about those tortures, you can gather information from the confidential files. Things have happened.

I request you to take necessary steps to protect the prisoners of Madras Central Jail from such tortures at least in the near future.

MISA detenus who are kept in Madurai and Vellore jails have been allowed for interview for the past two weeks. But in Madras Central Jail the relatives of the MISA detenus have not been allowed for interview even now.

I do hope that your conscience will not accept the way in which the political prisoners have been treated worser than those who have been convicted for murder. I request you to save the jail birds from torture by the Madras Central Jail authorities.”

என்று குடியரசுத் தலைவருக்கு நான் எழுதி இருக்கிறேன்.

### சிறை வாசலில் உண்ணாவிரதம்

இதற்கிடையில் சென்னை தவிர மற்றச் சிறைச்சாலைகளில் உறவினர்கள் அல்லது பெற்றோர்கள், நெருங்கிய உறவினர் கள் மிசா கைதிகளை இன்டர்வியூ பார்க்கலாம் என்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டன.

நான் டெல்லிக்கும் இங்குள்ள கவர்னருக்கும் கடிதமும் தந்தியும் அனுப்பிய பிறகும் எந்தவிதமான பதிலும் விளக்க மும் எங்களுக்குக் கிடைக்காத நிலையில், அடுத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பிற்பகல் 1 மணி அளவில் அப் போது போலீஸ் ஐ.ஜி.யாக இருந்த அருள் அவர்களைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டேன்.

ஏறத்தாழ 27 நாட்களுக்கு மேலாகிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சிறைச்சா லையில் அடைக்கப்பட்டு அவர்களை இதுவரையில் நேர் காண அனுமதிக்கப்படவில்லை.

நான் ஒரு நாள் உங்களுக்கு நேரம் தருகிறேன். அதற்குள் ளாக எங்களுக்கு நீங்கள் தக்க பதில் அளிக்காவிட்டால், அந் தக் கைதிகளைப் பார்ப்பதற்கு அவர்களது உற்றார் உறவினர் களுக்கு அனுமதி வழங்காவிட்டால், மறுநாள் காலையில் என்னுடைய தலைமையில் உள்ளே இருக்கிற அரசியல்வா திகளுடைய வீட்டார் அனைவரும் புறப்பட்டு சென்னை சிறைச்சாலை வாசலிலே உட்கார்ந்து உண்ணாவிரதம் தொடங்குவதாக இருக்கிறோம் என்று நான் ஐ.ஜி. அவர்க ளுக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தேன்.

அப்போது ராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மாநாடு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக ஐ.ஜி. அவர்கள் ராஜாஜி மண்டபத்திற்கு விரைந்து சென்று அங்கே செய்தியை அறி வித்து, அதற்குப் பிறகு மறுநாள் எங்களுக்கு உள்ளே இருக் கிற கைதிகளைக் காண அந்தக் கைதிகளின் உறவினர்க ளுக்கு அனுமதி வழங்கப்படுவதாக டெலிபோன்கள் வருகின்றன; அதைத் தொடர்ந்து கடிதங்களும் வருகின்றன.

### ஸ்டாலினைச் சந்தித்தபோது

நாங்கள் இன்டர்வியூ பார்க்கப் போன நேரத்தில் இங்கே கூட ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டார்கள். கருணாநிதி இன்டர்வியூ பார்க்கப் போனபோது அவருடைய மகன் ஸ்டாலினே கூட தான் அடிப்பட்டதாகச் சொல்லவில்லை என்று இஸ்மாயில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள்.



அதற்குப் பிறகு தொடர்ந்து என்ன குறிப்பிட்டிருக்கிறார் நீதி பதி இஸ்மாயில் அவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. தான் அடிப்பட்டோம் என்பதைச் சொல்லக்கூட முடியாத நிலைமையிலே அங்கே கைதிகள் இருந்தார்கள் என்பதற்கு அது ஒரு உதாரணம்.

நானும் எங்கள் வீட்டாரும் சென்று அமர்ந்திருக்கிற நேரத் தில் ஸ்டாலினையோ மாறனையோதான் பார்க்க முடியும். உற்றார் உறவினர்களைத்தான் பார்க்க முடியும் என்ற விதி இருப்பதால் மற்ற நண்பர்களைப் பார்க்க இயலாது. அப்படி உட்கார்ந்திருக்கிற நேரத்தில் எங்களைச் சுற்றி வளையம் போல் அதிகாரிகள் வந்து நின்றுகொள்வார்கள். இன்னும் சொல்லப்போனால் வெளியே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் கூட வந்து நின்றுகொள்வார்கள்.

தொடர்ச்சி நாளை

நன்றி :
“மின்னம்பலம்” இணையதளம்